தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066




dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 260 | 4 Pages | 18.4.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 260 | 4 பக்கங்கள் | 18.4.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயி ரெல்லாந் தொழும்**

**விளக்கம்:**
தவ வலிமையால் தன்னுடைய உயிர், தான் என்னும் பற்று நீங்கப் பெற்றவனை மற்ற உயிர்கள் எல்லாம் (அவனுடைய பெருமையை உணர்ந்து) தொழும்.

# ரூ.1,882 கோடி முதலீடு.. 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு: சிறுசேரியில் தரவு மையத்தை திறந்துவைத்தார் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஏப்.18

தமிழ்நாடு செய்தி, மக்கள் தொடர்பு துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் இன்று செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1,882 கோடி ரூபாய் முதலீட்டில் 1,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சிஃபி நிறுவனம், சிப்காட் சிறுசேரி தொழில்நுட்பப் பூங்காவில் அமைத்துள்ள தரவு மையத்தை திறந்து வைத்தார்.



தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணிமாநிலமாகவும்விளங்கி வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, 202425 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு 202425ஆம் ஆண்டில் 9.69 சதவிகிதம் வளர்ச்சி வீதத்துடன் இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிகபட்சவளர்ச்சி இதுவாகும்.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டுவருகிறது.

அந்த வகையில், தரவு மையங்களுக்கான முன்னணி மையமாக உள்ள தமிழ்நாட்டினை, தரவு மைய சந்தையில் முதலீட்டாளர்களுக்கு விருப்பமான இடமாகவும், நாட்டின் தரவு மைய தலைநகராகவும், மாற்றம் செய்வதற்காக தொலைநோக்கு பார்வையுடன் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு தரவு மையக் கொள்கையை 26.11.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அதன் பலனாக, பல்வேறு முன்னணி நிறுவனங்கள் இத்துறையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன.

சிபி டெக்னாலஜீஸ் நிறுவனம், சிப்காட் சிறுசேரி தகவல் தொழில்நுட்பப்பூங்காவில், 40 மெகாவாட் மின் ஆதரவு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுடன், ஒரு அதிநவீன தரவு மையத்தை நிறுவியுள்ளது. முதற்கட்டமாக, இத்திட்டத்தில் 1,882 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய இந்த அதிநவீன தரவு மையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார். 2027ஆம் ஆண்டிற்குள், சென்னையில், 13,000 கோடி ரூபாய் முதலீடு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது

இந்நிகழ்ச்சியில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியுடன் மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக் சந்திப்பு



புதுடெல்லி, ஏப்.18

டெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதி திரவுபதி முர்முவை மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக் இன்று சந்தித்து பேசினார். இந்தியாவின் 4வது உயரிய விருது என கூறப்படும் பத்மஸ்ரீ விருது பெற்றுள்ள பட்நாயக், ஒடிசாவின் பூரி பீச்சில் மணல் சிற்ப பள்ளிக்கூடம் ஒன்றை அவர் நடத்தி வருகிறார்.


அவர் பிளாஸ்டிக் மாசுபாடு, கொரோனா பாதிப்பு, பயங்கரவாதங்களை தடுத்து நிறுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உலக வெப்பமயமாதல் உள்ளிட்ட பல்வேறு சமூக விசயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளார்.

உலகம் முழுவதும் 65 சர்வதேச மணல் சிற்ப சாம்பியன்ஷிப் போட்டிகள் மற்றும் திருவிழாக்களில் அவர் பங்கேற்றுள்ளார். அவருடைய பணிக்காக எண்ணற்ற பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில், கலை வடிவுக்கு பங்காற்றியதற்காக, இங்கிலாந்தில் கடந்த 5ந்தேதி அவருக்கு தி பிரெட் டாரிங்டன் என்ற உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. வெய்மவுத் நகரில் நடந்த 2025ம் ஆண்டுக்கான சர்வதேச மணல் சிற்ப திருவிழாவில் பட்நாயக்கிற்கு, இங்கிலாந்து மணல் சிற்ப நிபுணருக்கான விருது வழங்கப்பட்டது.

இதனை குறிக்கும் வகையில், உலக அமைதி என்ற செய்தியுடன், கடவுள் விநாயகரின் 10 அடி உயர மணல் சிற்பம் ஒன்றையும் அவர் உருவாக்கினார். இந்நிலையில், ஜனாதிபதியுடன் மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக்கின் சந்திப்பு நடந்துள்ளது.

## கர்நாடகா: லாரி உரிமையாளர்கள் சங்கம் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம் வாபஸ்




பெங்களூரு, ஏப்.18

கர்நாடகாவில் டீசல் விலை ரூ.2 உயர்த்தப்பட்டதுடன், சுங்கச்சாவடிகளில் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது. இதனால் டீசல் விலை உயர்வை திரும்ப பெற வேண்டும், மாநில அரசின் கீழ் உள்ள 18 சுங்கச்சாவடிகளை அகற்ற வேண்டும், வட்டார போக்குவரத்து அதிகாரிகளால் லாரி டிரைவர்களுக்கு கொடுக்கப்படும் தொல்லைகளை நிறுத்த வேண்டும் உள்ளிட்ட 5 கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி லாரி உரிமையாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

இந்த காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் இன்று 3வது நாளாக தொடர்ந்தது. வேலை நிறுத்த போராட்டத்திற்கு விமான நிலைய வாடகை கார்கள், டேங்கர் லாரிகள் சங்கம், ஜல்லி கற்கள் ஏற்றி செல்லும் லாரிகள் உள்பட 40க்கும் மேற்பட்ட சங்கங்கள் முழு ஆதரவு அளித்திருந்தன.

இந்நிலையில், லாரி உரிமையாளர்கள் மற்றும் கர்நாடக அரசு அதிகாரிகளிடையே இன்று பேச்சு வார்த்தை நடந்தது. அப்போது சுமுக உடன்பாடு ஏற்பட்டநிலையில், லாரி உரிமையாளர்கள் சங்கம் நடத்தி வந்த வேலைநிறுத்தப் போராட்டம் வாபஸ் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐதராபாத்: சர்வதேச பயிர்கள் ஆய்வு மையத்தில் பிடிபட்ட சிறுத்தை




ஐதராபாத், ஏப்.18

தெலுங்கானாமாநிலம் ஐதராபாத் அருகே புறநகர் பகுதியில் சர்வதேசபயிர்கள் ஆய்வு மையம்அமைந்துள்ளது. இந்த பகுதியில் கடந்த சில மாதங்களாக இரண்டு சிறுத்தைகள் சுற்றித் திரிந்தன.

இந்த சிறுத்தைகளை பிடிப்பதற்காக வனத்துறையினர்கூண்டு வைத்திருந்தனர். இந்த நிலையில், வனத்துறையினர் வைத்திருந்த கூண்டில் சிறுத்தை ஒன்று சிக்கியுள்ளது. கூண்டில் சிக்கிக்கொண்ட சிறுத்தையை வனத்துறையினர் நேரு உயிரியல் பூங்காவிற்கு கொண்டு சென்றனர்.

## மேகாலயாவில் ஒரே நாளில் அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம்... மக்கள் அச்சம்

ஷில்லாங், ஏப்.18

மேகாலயாவில் உள்ள கிழக்கு காரோ மலைப் பகுதியில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. இரவு 11.19 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 2.7 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 25.60 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 90.59 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக இன்று அதிகாலையில் ரிக்டர் 3.1 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஒரே நாளில் அடுத்தடுத்து இரண்டு முறை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

## தென்காசி மாவட்டத்திலுள்ள கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் பிரதானமாக அமையப்பெற்றதை காட்சிப்படுத்துவதை உறுதி செய்வதற்காக மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு கூட்டம்

தென்காசி, ஏப்.18

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தென்காசி மாவட்டத்திலுள்ள கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் பிரதானமாக அமையப்பெற்றதை காட்சிப்படுத்துவதை உறுதி செய்வதற்காக மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள்சட்ட விதிகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கடைகள், வணிகநிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் அனைத்து தொழில் நிறுவனங்களின் பெயர் பலகைகள் தமிழில் வைக்கப்பட வேண்டும். மேலும் தமிழ் அல்லாது பிற மொழியும் தேவைப்படும் பட்சத்தில் தமிழில் முதன்மையாகவும், பெரியதாகவும், போதிய இடைவெளியுடன் மற்ற மொழிகளை விட பார்வைக்கு மேலோங்கியும் இருக்க வேண்டும். பின்னர் ஆங்கிலத்தில் இரண்டாவதாகவும், பிற மொழிகளில் அடுத்ததாகவும் இடம் பெற வேண்டும்.



தென்காசி மாவட்டத்தில், கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் பிரதானமாக அமையப்பெற்றதை காட்சிப்படுத்துவதை உறுதி செய்வதற்காக தொழிலாளர் துறை, தமிழ் வளர்ச்சித் துறை, உள்ளாட்சி அமைப்புகள், மாவட்ட அளவிலான வணிகர் சங்கங்கள். உணவக உரிமையாளர் சங்கங்கள், வேலையளிப்போர் சங்கங்கள் ஆகியோர் அடங்கிய மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

நகராட்சி, பேரூராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள் அந்தந்த நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிகர் சங்கப் பிரதிநிதிகள், பெரு வணிகர்கள், உணவு நிறுவன உரிமையாளர்கள் மற்றும் அனைத்து தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், கூட்டத்தை கூட்டி அனைத்துவணிகநிறுவனங்களிலும் தமிழில் பெயர்பலகை அமைப்பதை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். (15.05.2025) ஆம் தேதிக்குள் தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களிலும் பெயர்ப்பலகை கட்டாயமாக தமிழில் பிரதானமாக அமையப்பெற வேண்டும். (15.05.2025) ஆம் தேதிக்கு பின்னர், தொழிலாளர் துறை அலுவலர்கள், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் வணிக நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழில் பெயர்ப்பலகை அமையப்பெறாத நிறுவனங்களின் மீது சட்டப்பூர்வமான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவில் உள்ள அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் தென்காசி மாவட்டத்திற்குட்பட்ட வணிகர் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை வடக்கு ஒன்றியம் க. உசிலம்பட்டி, முனியாண்டிபட்டி கிளைக்கழக திமுக சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் வடமாடு மஞ்சுவிரட்டு

சிவகங்கை, ஏப்.18

சிவகங்கை வடக்கு ஒன்றியம் க. உசிலம்பட்டி, முனியாண்டிபட்டி கிளைக்கழக திமுக சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் வடமாடு மஞ்சுவிரட்டு அசல்ராஜா, அரசாங்கம், திருப்பதி ஏற்பாடு திருமலை. முத்துராமலிங்கம், மந்தக்காளை, பாலச்சந்தர், மதிவாணன், கிங்கார்த்திக்பங்கேற்பு

சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக க. உசிலம்பட்டி கிளைக்கழக திமுக சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் , கழகத்தலைவர்முத்துவேல்கருணாநிதிஸ்டாலின் அவர்களின்பிறந்தநாள்விழாமற்றும்முனியாண்டி கோவில் திருவிழாவை முன்னிட்டு மாபெரும் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது.



உசிலம்பட்டி, முனியாண்டிபட்டி கிளைக்கழக திமுக நிர்வாகிகளான அசல்ராஜா, எஸ். எம். அரசாங்கம், திருப்பதி ஆகியோரது ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த வடமாடு மஞ்சுவிரட்டு நிகழ்ச்சியில் வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம், தலைமையில் கண்டாங்கி பட்டி மேனாள் ஊராட்சி தலைவர் மந்தக்காளை, மேனாள் சேர்மன் ஹரிபாலா பாலச்சந்தர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ். எம். மதிவாணன், கிங் கார்த்திக், ஒன்றிய இளைஞரணி இடையமேலூர் வேல்முருகன், , மாவட்ட விவசாய அணி மேனாள் ஊராட்சி தலைவர் தமறாக்கி ரவி, ஒன்றிய திமுக ஐடி விங் தமறாக்கி அம்பலம் , ஒனறிய விளையாட்டு மேம்பாட்டு அணி கண்டாங்கி பட்டி நாராயணன் உள்ளிட்ட கிளைக்கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## எம்ஜிஆர் பாடலை பாடியதால் திமுக எம்எல்ஏ பேச்சை வரவேற்ற அதிமுகவினர்

சென்னை, ஏப்.18

பேரவையில் நேற்று முசிறி தியாகராஜன் (திமுக) பேசுகையில், ''எங்கள் தொகுதிக்கு விவசாயத்தைவிட்டால்வேறு வழியில்லை. நீர்வளத் துறை அமைச்சர் நிதியில்லை என்று சொல்கிறார். இதை ஊர் மக்களிடம் சொன்னபோது,

வயதான ஒருவர், ''என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் '' என்ற எம்ஜிஆர் பாட்டு பாடினார். (எம்ஜிஆர் பாட்டை கேட்டதும் அதிமுக உறுப்பினர்கள் கைதட்டி வரவேற்றனர்).



இந்த பாடலின்படி, வளமான இந்தத் தமிழ்நாட்டை விட்டு நாம் ஏன் வெளியில் கையை ஏந்த வேண்டும்.

எனவே நீர்வளத்துறை அமைச்சரிடம் கேட்கிறேன், நமக்கான நிதியை ஒன்றிய அரசு தரவில்லை என்பது தெரிந்து விட்டது. எனவே எங்களுக்கு உங்களை (துரைமுருகன்) விட்டால் வேறு கதியில்லை.

நீங்கள் மனம் திறந்தால் தான் கொல்லிமலைத் தண்ணீர் முசிறிக்கு வரும். அதே போல காவிரி தண்ணீர் எங்களுக்கு பாயும்'' என்றார். இந்த பேச்சால் அவையில் சிரிப்பலை எழுந்தது.



# சிவகங்கையில் மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

## கார்த்தக் ப. சிதம்பரம், சஞ்சய் காந்தி, வித்யா கண்பதி, விஜயகுமார், பங்கேற்பு

நேஷனல் ஹெரால்டு பத்திரிகை வழக்கு சம்பந்தமாக காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் மீது அமலாக்கத்துறையினர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை கண்டித்து சிவகங்கை நகர் அரண்மனை வாசல் பகுதியில் சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் மாபெரும்கண்டனஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காங்கிரஸ் நகரத்தலைவர் கவுன்சிலர் விஜயகுமார் வரவேற்புரையாற்றிட மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி தலைமையில் நடைபெற்றது..

இதில் மாவட்ட மேனாள். தலைவர் இராஜரத்தினம், தொகுதி பொறுப்பாளர் சோனை, துணைத்தலைவர் சண்முகராஜன் , மாநில மகிளா காங்கிரஸ் துணைத்தலைவர் ஸ்ரீ வித்யா கணபதி, தெய்வேந்திரன், அப்பச்சி சபாபதி, குமரன் மெஸ் சிதம்பரம், மோகன்ராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்...



ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்திக ப.. சிதம்பரம் ஒன்றிய பாஜக அரசான து அமலாக்கத்துறையை ஏவிவிட்டு இந்த மாதிரியான வேலைகளைச் செய்கிறது எனவும் இதனை சட்டரீதியாக எதிர்கொள்வோம் எனவும் இதனால் காங்கிரஸ் கட்சியினர் யாரும் பயப்பத் தேவையில்லை எனவும் இதைக்கண்டு காங்கிரஸ் கட்சியினர் அச்சம் கொள்ள தேவையில்லை எனவும் தெரிவித்தார்... காங்கிரஸ் கட்சியினர் ஒன்றிய பாஜக அரசிற்கெதிரான கடும் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வட்டாரத்தலைவர்கள் கரும்பாவூர் உடையார், , மதியழகன், சந்தியாகு, செல்லாண்டி, குமார், எஸ். எஸ். ரமேஷ், தேவகோட்டை சஞ்சய், மாநில எஸ்சி. எஸ்டி பிரிவு செயலாளர் மேலமங்களம் முதளீதரன், ரெட்ரோஸ் பழனிச்சாமி, மாவட்ட மேனாள் கவுன்சிலர் ஆரோக்கிய சாந்தா ராணி, மாவட்ட மகளிரணி ஏலம்மாள் இராஜேந்திரன் , கவுன்சிலர் மகேஷ்குமார், செங்குட்டுவன், தர்மர், மகாலிங்கம், ராஜேஷ், இலக்கிய நடராஜன், சித்திக், சோமசுந்தரம், ஜெகன் ஆர்ட்ஸ் நாலுகோட்டை கருப்பையா உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தால் ஈடுபட்டனர்...

# நெல்லையில் பாட்டியை தாக்கிய பேரனை போலீசார் கைது செய்தனர்

திருநெல்வேலி, ஏப்.18

திருநெல்வேலி மாநகரம், சந்திப்பு காவல் சரகம், செல்வி நகரில் தேவஆசீர்வாதம் மனைவி மேரிசெல்வபாய் என்பவர் வசித்து வருகிறார்.

அவர் நேற்று (16.04.2025) தனது பேரனுடன் தனது வீட்டில் இருந்த பொழுது, யாரோ மர்ம நபர் மேரி செல்வபாயை தாக்கிவிட்டு அவரது கழுத்தில் அணிந்திருந்த 7 சவரன் தங்க செயினை திருடி சென்றதாக கூறப்பட்டது.

மேற்சொன்ன சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டனர். அந்த சம்பவத்தில் காயம்பட்ட பெண்மணி திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டார். மேலும் காணாமல் போனதாக கூறப்பட்ட தங்க செயின் அந்த பெண்ணின் வீட்டிற்கு உள்ளே கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த சம்பவம் தொடர்பாக காவல் துறையினர்தொடர்ந்துமேற்கொண்டவிசாரணையில், மேற்சொன்ன சம்பவத்தில் பாட்டியுடன் வீட்டில் இருந்த பெரியசாமி மகனும், மேரிசெல்வபாயின் பேரனுமான சரண்பிரபு (வயது 21), தனது பாட்டியை தாக்கியது தெரியவந்தது. இதனை தொடர்ந்து சரண்பிரபுவை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர்.

# ஊழல், கையூட்டு தொடர்பாக புகாரளிக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு உதவி மையம்



சென்னை, ஏப்.18

'ஊழல் தடுப்பு மற்றும் கையூட்டு தொடர்பாக பொதுமக்கள் புகார் அளிக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு உதவி மையம் அமைக்கப்படும் என அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அறிவித்துள்ளார். பேரவையில் நேற்று மனித வள மேலாண்மை துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார். அவை பின்வருமாறு:

★ சென்னையில் உள்ள அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியில் கட்டிடம் மற்றும் மின்சாதனங்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள், ரூ.55 லட்சம் செலவில்மேம்படுத்தப்படும்.

★ தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து போட்டித் தேர்வுகளுக்காக தயாராகும் இளைஞர்களின் நலன் கருதி, கூடுதலாக சென்னை, அண்ணா நகரில் நவீன வசதிகளுடன் ஒரு அகில இந்திய குடிமைப்பணிதேர்வுபயிற்சி மையம் தொடங்கப்படும்.

★ ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு இஆபிஸ் திட்டத்தின் மூலம் தேவையான மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்படும்.

★ ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் ஒவ்வொரு பிரிவு அலுவலகத்திற்கும் ஒரு கருவி வீதம் 46 குரல் பதிவு செய்யும் கருவிகள் ரூ.6.32 லட்சத்தில் வழங்கப்படும்.

★ ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் புலன் விசாரணை அலுவலர்களுக்கு 144 மடிக்கணினிகள் ரூ.99 லட்சத்தில் வழங்கப்படும்.

★ ஊழல் தடுப்பு மற்றும் கையூட்டு தொடர்பாக பொதுமக்கள் தடையின்றி கட்டணமில்லா தொலைபேசி மூலம் எளிதாக புகார் அளிக்க ஏதுவாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு உதவி மையம் முதல்வரின் முகவரி துறையின் கீழ் ரூ.53.75 லட்சத்தில் அமைக்கப்படும்.

# நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட குற்றவாளி

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, பரவாக்கோட்டை 2/169 சாமிநாதன் தெருவை சேர்ந்த ராபின் (32), த/பெ ரவிச்சந்திரன் என்பவர் கடந்த 2019ஆம் ஆண்டு அவிநாசி தனியார் மில்லில் வேலை பார்த்த பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த கணபதி என்பவரை கொலை செய்ததாக அவிநாசி காவல் நிலைய 5 : 407/2019 U/S 302 IPC and 3 (2) (V) OF SC |/ ST (POA) ACt ன்படி போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து ராபினை கைது செய்தனர். பின்னர், நீதிமன்ற |பிணையில் வெளியே வந்த அவர் தொடர்ந்து விசாரணைக்கு ஆஜராகாமல் கடந்த மூன்று ஆண்டுகளாக தலைமறைவாக இருந்து வந்தார்.

இந்தநிலையில், போலீசார் சார்பில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, நீதிமன்றம் கடந்த பிப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் அவரை நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பித்தது. அதன்பின்னரும், ராபின் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்ததையொட்டி திருப்பூர் பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு தடுப்பு நீதிமன்ற நீதிமன்றத்தால் (பிரகடனப்படுத்தப்பட்ட) அறிவிக்கப்பட்ட குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளது.



| காவல் துணைகண்காணிப்பாளர், அவிநாசி உட்கோட்டம், திருப்பூர்மாவட்டம் 83000 37777

அவிநாசி காவல் நிலையம், திருப்பூர்மாவட்டம் 9498101328

# இலங்கை கடற்படை அட்டூழியம்: பாம்பன் மீனவர்கள் மீது இரும்புக் குழாயால் தாக்குதல்

ராமேஸ்வரம், ஏப்.18

பாம்பனில் இருந்து நேற்று முன்தினம் மன்னார் வளைகுடா பகுதிக்கு நூற்றுக்கணக்கான நாட்டுப்படகுகளில் ஏராளமான மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். இரவு 10 மணியளவில் தனுஷ்கோடி அருகே இந்திய கடல் எல்லையோரம் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை, மூன்று கப்பல்களில் ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் பாட்டில்களை வீசி விரட்டியடித்தனர்.



பின்னர் படகை சிறைபிடிக்க சுற்றிவளைத்த இலங்கை கடற்படையின் பிடியில் சிக்காமல் மீன்பிடி வலைகளை கடலிலேயே வெட்டி விட்டு மீனவர்கள் அங்கிருந்து தப்பினர்.

கடற்படையின்ரோந்து கப்பல் விரட்டி வந்து மோதியதில் தங்கச்சிமடத்தை சேர்ந்த இன்னாசி முத்துவின் படகு உடைந்தது. படகை சுற்றிவளைத்து பிடித்த இலங்கை கடற்படையினர்,படகில் ஏறி மீனவர்களைஇரும்பு குழாயால் சரமாரியாக தாக்கிவிட்டு மீன்களை எல்லாம் அள்ளிச் சென்றனர். இதில் மீனவர்கள் உமையராஜ், சேந்தி, ஆரோக்கிய கைடன் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. கென்னடி என்பவரை தலையில் தாக்கியதில் மண்டை உடைந்து காயம் ஏற்பட்டது. இலங்கை கடற்படையின் இந்த அத்துமீறல் நடவடிக்கை ஒட்டுமொத்த நாட்டுப்படகுமீனவர்கள் மத்தியிலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மோசமான வானிலை: 3 விமானங்கள் தரையிறக்கம்

சென்னை, ஏப்.18

பெங்களூருவில் மோசமான வானிலை காரணமாக 3 விமா னங்கள் சென்னை விமான நிலையத்தில் வந்து தரை இறங்கின.

பெங்களூருவில், நேற்று மாலை திடீரென பலத்தசூறைக்காற்றுடன் மழை பெய்ததால் மோசமான வானிலை நிலவியது. இதையடுத்து, பெங்களூரு விமான நிலையத்தில் தரையிறங்கச்சென்ற 3 விமானங்கள் தரையிறங்க முடியாமல் சென்னைக்கு வந்து தரையிறங்கின.

இந்த 3 விமானங்களில் வந்த பயணிகள் விமானங்களிலேயே அமர வைக்கப்பட்டு கடும் அவதியடைந்தனர்.

# நடிகர் சிவாஜி கணேசன் வீட்டை ஜப்தி செய்யும் உத்தரவை எதிர்த்து நடிகர் பிரபு தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு தள்ளிவைப்பு: சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஏப்.18

நடிகர் சிவாஜி கணேசனின் அன்னை இல்லம் வீட்டை ஜப்தி செய்து பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய கோரி நடிகர் பிரபு தாக்கல் செய்த மனு மீதான உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்துள்ளது. ஜகஜால கில்லாடி பட தயாரிப்புக்காக நடிகர் சிவாஜி கணேசனின் பேரன் துஷ்யந்த் பெற்ற கடன் வட்டியுடன்சேர்த்து 9 கோடியே 39 லட்சம் ரூபாயை திருப்பித் தரக் கோரிய வழக்கில் நடிகர் சிவாஜி கணேசனின் அன்னை இல்லம் வீட்டை ஜப்தி செய்ய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், அன்னை இல்லம் தனக்கு சொந்தமானது என்பதால், வீட்டை ஜப்தி செய்ய பிறப்பித்த உத்தரவை நீக்கக் கோரி நடிகர் பிரபு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.



இந்த வழக்கில் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் துஷ்யந்தின் தந்தை ராம்குமார், அன்னை இல்லத்தின் மீது தனக்கு எந்த உரிமையும், பங்கும் இல்லை என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பு விசாரணைக்கு வந்தபோது, நடிகர் பிரபு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், அன்னை இல்லம் வீட்டின் முழு உரிமைதாரர் பிரபு. அந்த வீட்டின் மீது ராம்குமாருக்கு எந்த தொடர்பும் இல்லை. நீதிமன்றம் அன்னை இல்லம்வீட்டைஜப்திசெய்து உத்தரவு பிறப்பித்ததற்கு வெகு காலம் முன்பே அந்த வீட்டை நடிகர் சிவாஜி கணேசன் நடிகர் பிரபுவுக்கு உயிர் எழுதி வைத்துள்ளார். அதன் அடிப்படையில் பத்திரப் பதிவும் செய்யப்பட்டுள்ளது.அதனால்நீதிமன்றம் ஜப்தி செய்யுமாறு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

இந்த வாதங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து தன பாக்கியம் என்டர்பிரைசஸ் நிறுவனம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பல கோடி ரூபாய் மதிப்பிலான 22 கிரவுண்ட் பரப்பில் அமைந்துள்ள அன்னை இல்லம் வீட்டில் ராம்குமார் தனது உரிமையை விட்டுக் கொடுத்தார் என்பதை நம்ப முடியவில்லை. சொத்து உரிமை நடிகர் பிரபுவுக்கு இருக்கிறதா என்பதை முழு விசாரணைக்குப் பிறகு முடிவு செய்ய முடியும் என்பதால் ஜப்தி உத்தரவை ரத்து செய்யக்கூடாது என்று வாதிட்டார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி அப்துல் குத்தூஸ், அன்னை இல்லம் வீட்டை ஜப்தி செய்ய பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக் கோரி நடிகர் பிரபு தாக்கல் செய்த மனு மீதான உத்தரவைதேதிகுறிப்பிடாமல் தள்ளி வைத்தார்.

# தர்பூசணி பழங்களில் எந்த ரசாயனமும் இல்லை: சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசு தகவல்




சென்னை, ஏப்.18

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தர்பூசணி பழங்களை ஆய்வு செய்ததில் எந்த ரசாயனமும் செலுத்தப்படவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளதாக தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. தர்பூசணி பழங்களின் நிறத்துக்கும், சுவைக்கும் ஊசி மூலம் ரசாயனம் செலுத்தப்படுவதாகக் கூறி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்திய உணவு பாதுகாப்பு துறை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி செங்கல்பட்டு விவசாய நலச் சங்கத்தின் தலைவர் வெங்கடேசன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதி டி. பரத சக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக அரசு தரப்பில், தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தர்பூசணி பழங்களை ஆய்வு செய்ததில் எந்த ரசாயனமும் பழங்களில் செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, மனுதாரர் கூறும் குற்றச்சாட்டு குறித்து விளக்கம் அளிக்குமாறு உணவு பாதுகாப்பு துறை அதிகாரி சதீஷ்குமாருக்கு உத்தரவிட்டு விசாரணையை ஜூன் 9ம் தேதிக்கு தள்ளி வைத்தார். மேலும், தர்பூசணி விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை ஈடு கட்டும் வகையில், தர்பூசணி பழங்களில் எந்த ரசாயன மருந்தும் சேர்க்கப்படவில்லை என்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து ஊடகங்களிலும் விளம்பரம் கொடுக்க வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# செங்கோட்டை, ஈரோடு ரயிலை கவிழ்க்க சதி?



வீரவநல்லூர், ஏப்.18

தென்காசி மாவட்டம் செங்கோட்டை ஈரோடு பாசஞ்சர் ரயில் நேற்று காலை 5 மணியளவில் செங்கோட்டையில் இருந்து புறப்பட்டது. இந்த ரயிலில் 500 பயணிகள் பயணித்தனர். நேற்று காலை 6 மணியளவில் சேரன்மகாதேவியை அடுத்த கூனியூர் அருகே ரயில் வரும்போது தண்டவாளத்தில் பெரிய அளவிலான சிமெண்ட் கல் வைக்கப்பட்டிருந்ததாக தெரிகிறது. இதனை ரயில்வே இன்ஜின் டிரைவர் கவனிக்கவில்லை. இதனால் ரயில் வந்த வேகத்தில் சிமெண்ட் கல் மீது ஏறி இறங்கியது. இதையடுத்து ரயிலை உடனடியாக ரயில் இன்ஜின் டிரைவர் நிறுத்தினார்.

இதுகுறித்து உடனடியாக அவர் தென்காசி ரயில்வே போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்திற்கு ரயில்வே பாதுகாப்பு படையினர் விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். இதில் கூனியூர், பழைய சாலைத் தெருவை சேர்ந்த கோபால் மகன் முருகன் (40) என்பவர் தண்டவாளத்தில் கல் வைத்தது தெரிய வந்தது. இதுதொடர்பாக வழக்குபதிந்த ரயில்வே எஸ்ஐ கற்பகவிநாயகம், முருகனை அதிரடியாக கைது செய்தனர்.

# நாங்குநேரி மாணவன் சின்னத்துரை மீது மீண்டும் தாக்குதல்

நெல்லை, ஏப்.18

நெல்லை மாவட்டம் நாங்குநேரியை சேர்ந்த கூலி தொழிலாளி முனியாண்டி. இவரது மகன் சின்னத்துரை (20). இவர் கடந்த 2023ம் ஆண்டு அரசு பள்ளியில் படித்து வந்த போது வேறு சமுதாய மாணவர்களுடன் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக அதே பள்ளியை சேர்ந்த மாணவர்கள் சிலர், அவரை அரிவாளால் வெட்டினர். இதைதடுக்கமுயன்ற தங்கைக்கும் வெட்டு காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதைதொடர்ந்து அவர் குணமடைந்ததும். அவருக்கு அரசு சார்பில் நெல்லை ரெட்டியார்பட்டியில் வீடு வழங்கப்பட்டது. அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போது பிளஸ்2 தேர்வில் தேர்ச்சி பெற்றார்.



இதன்பின்னர் பாளையில் உள்ள ஒரு அரசு உதவி பெறும் கல்லூரியில் 2வது ஆண்டு படித்து வருகிறார். இந்நிலையில் சின்னதுரைக்கு கிரிண்டர் செயலி மூலம் மர்ம நபர்களுடன் பழக்கம் ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் நேற்று சின்னத்துரையை தொடர்பு கொண்டு மாவட்ட அறிவியல் மையம் அருகே உள்ள வசந்தாநகருக்கு வரவழைத்தனர். சின்னத்துரை அங்கு வந்ததும் பதுங்கி இருந்து மர்ம நபர்கள் அவரை தாக்கினர். இதனால் அவருக்கு ஏற்கனவே காயம் ஏற்பட்ட கையில் மீண்டும் காயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரிடம் மாநகர போலீஸ் துணை கமிஷனர் வினோத் சாந்தாராம் நேரில் விசாரணை நடத்தினர். சின்னத்துரையை தாக்கிய 5 பேர் கொண்ட கும்பலை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

# ஒன்றிய, மாநில அரசுகளின் உறவுகளை மீட்டெடுப்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சாதனை படைப்பார்: பொன்குமார் அறிக்கை

சென்னை, ஏப்.18

தமிழ்நாடுவிவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் நேற்று வெளியிட்ட அறிக்கை: இந்திய அரசமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் நியாயமான உரிமைகளை பாதுகாக்க உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப்பை தலைவராக கொண்டு ஒரு குழுவை முதல்வர் அமைத்துள்ளார்.



மாநில உரிமைகளை மீட்பதிலும்,மாநிலங்கள் மீது ஒன்றிய அரசு மேற்கொள்ளும் முரட்டுத்தனமானத் தாக்குதலை தடுத்து நிறுத்துவதிலும் இந்தியாவிற்கு வழிகாட்டியாக திகழும் முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய மாநில அரசுகளின் உறவுகளைமீட்டெடுத்து மேம்படுத்துவதிலும் நிச்சயம் சாதனை படைப்பார்.

# வக்ஃபு வாரிய திருத்தச் சட்டம்: ரயில் மறியல் செய்ய முயன்ற தமிழ் புலிகள் கட்சியினர் கைது

சென்னை, ஏப்.18

: வக்ஃபு வாரிய திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி ரயில் மறியல் செய்ய முயன்ற தமிழ் புலிகள் கட்சியினர் கைது செய்யப்பட்டனர். போலீசார் தடுத்து நிறுத்தியதால், இருதரப்பினர் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது.

# அதிமுக, பாஜக கூட்டணியில் அமித்ஷா, எடப்பாடி எடுத்திருக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை: நயினார் நாகேந்திரன்

சென்னை, ஏப்.18

அதிமுக, பாஜக கூட்டணியில் அமித் ஷா, எடப்பாடி எடுத்திருக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என தமிழ்நாடு பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார். கூட்டணி ஆட்சி குறித்த கேள்விக்கு நேரடியாக பதில் அளிக்க நயினார் நாகேந்திரன் மீண்டும் மறுப்பு தெரிவித்தார். தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சிக்கு வாய்ப்பில்லை என்று எடப்பாடி, தம்பிதுரை உள்ளிட்ட அதிமுக தலைவர்கள் கூறி வருகின்றனர். அதிமுக பாஜக கூட்டணியை பிளவுபடுத்த நினைக்க வேண்டாம் என்று நயினார்



நாகேந்திரன் வேண்டுகோள் விடுத்தார். கூட்டணி ஆட்சி குறித்த கேள்வியை இனி யாரிடமும் பத்திரிகையாளர்கள் கேட்க வேண்டாம் என்றும் நயினார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஊட்டி அருகே யூகலிப்டஸ் மரங்கள் வெட்டி கடத்திய 2 பேர் கைது: வனத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை



ஊட்டி, ஏப்.18

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே சோலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட மணிக்கல் பகுதி உள்ளது. இங்கு சோலூர் பேரூராட்சியின் கழிவு மேலாண்மைக்கூடம் உள்ளது. இங்கு ஏராளமான யூகலிப்டஸ் மரங்கள் உள்ளன. இந்த பகுதியில் நாள்தோறும் வாகனங்கள் சென்று வரும் நிலையில், அங்கு சென்று வரும் வாகனங்களுக்கு விபத்து அபாயம் ஏற்படும் நிலை நிலவியது. இதைத்தொடர்ந்து அந்த மரங்களை அகற்ற வேண்டும் என வாகன ஓட்டுனர்கள், பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதையடுத்து ஆபத்தான நிலையில் இருக்கும் அபாயகரமான யூகலிப்டஸ் மரங்களை வெட்டிக்கொள்ள மாவட்ட நிர்வாகத்திடம் சோலூர் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் அனுமதி கோரப்பட்டுள்ளது. மணிக்கல் சாலையோரத்தில் உள்ள 40 ஆபத்து நிறைந்த மரங்களை வெட்டிக்கொள்ள மாவட்ட கலெக்டர் தலைமையிலான குழு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிகிறது. ஆனால், அனுமதி வழங்கப்பட்ட 40 மரங்களுக்கு மேல் இப்பகுதியில் இருந்த மரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

வருவாய் நிலம், முதுமலை புலிகள் காப்பக வெளி மண்டலத்திற்கு உட்பட்ட பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் இருந்த 250 மரங்களை சட்டவிரோதமாக வெட்டிக் கடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இது குறித்து தகவலறிந்த முதுமலை புலிகள் காப்பக அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு மரக்கடத்தலில் ஈடுபட்ட சோலூர் தட்டனேரி பகுதியை சேர்ந்த சண்முகவேல் (43), கோத்தகிரி நெடுகுளா பகுதியை சேர்ந்த பிரவித்குமார் (49) ஆகியோரை கைது செய்தனர். தலைமறைவான மேலும் ஒருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# விசைத்தறியாளர்கள் பிரச்சனைக்கு தீர்வுகாணப்படும் : அமைச்சர்கள் உறுதி

சென்னை , ஏப்.18

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் விசைத்தறியாளர்கள் பிரச்சனைக்கு தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சட்டப்பேரவையில் பேசிய அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, செந்தில் பாலாஜி உறுதி அளித்துள்ள



னர். கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறியாளர்கள், கூலி உயர்வு கேட்டு ஒரு மாதத்துக்கு மேலாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.


கோவை, திருப்பூர் மாவட்டங்களில் கூலி உயர்வு கோரி விசைத்தறி கூலித் தொழிலாளர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்கள் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தனர்.

# குன்னூர் அருகே பர்லியார் பகுதியில் யானைகள் கூட்டம் நீரோடையில் தண்ணீர் குடித்து தாகம் தீர்த்த காட்சி

குன்னூர் , ஏப்.18

குன்னூர் அருகே பர்லியார் பகுதியில் காட்டு யானைகள் நீரோடையில் தண்ணீர் குடித்து தாகத்தை போக்கிய காட்சி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. சமவெளி பகுதியில் போதிய மழையில்லாதால் வனப்பகுதியில் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் வன விலங்குகள் வெயிலின் தாக்கம் மற்றும் உணவுத்தேடி இடம்பெயர்ந்து வருகின்றன. இந்த நிலையில் கடந்த மாதம் குன்னூர் – மேட்டுப்பாளையம் சாலையில் 9 காட்டு யானைகள் குட்டியுடன் முகாமிட்டு இருந்தன.

இந்த யானைகள் சாலையில் உலா வந்ததால் வாகன ஓட்டிகள் அச்சம் அடைந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்து வந்த வனத்துறையினர் நீண்ட போராட்டத்திற்கு பிறகு காட்டு யானைகளை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்டியடித்தனர். இதன்பின்னர் கடந்த சில நாட்களாக குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையில் யானைகள் நடமாட்டம் இல்லாமல் இருந்தன. தற்போது, குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பர்லியார், கே.என்.ஆர்.நகர் உள்ளிட்ட பகுதிகளில் பலா சீசன் தொடங்க உள்ளது.



இதனால் மீண்டும் குன்னூர் பகுதிக்கு காட்டு யானைகள் தொடங்கியுள்ளன. அதன்படி ஒரு குட்டியுடன் 10க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் குன்னூர் மலைப்பாதையான பர்லியார் வனப்பகுதியில் உள்ள நீரோடை பகுதியில் முகாமிட்டுள்ளது. நீரோடையில் காட்டு யானைகள் கூட்டம் தண்ணீர் குடித்து தாகத்தை போக்கியது. யானை கூட்டத்தை கண்ட அந்த பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர். காட்டு யானையை அடர்ந்த வனப்பகுதிக்கள் விரட்டும் பணியில் குன்னூர் வனத்துறையினர் தொடர்ந்து தீவிரம் காட்டி வருகின்றனர். தொடர்ந்து, காட்டு யானைகளின் நடமாட்டத்தை கண்காணித்து வருவதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

# கூடங்குளம் அருகே 606 அரிய வகை ஆமை குஞ்சுகள் கடலில் விடப்பட்டன: வனத்துறை நடவடிக்கை



கூடங்குளம், ஏப்.18

அழிந்து வரும் ஆமை இனமான ஆலிவ் ரெட்லி ஆமைகள் ஆண்டுதோறும் ஜனவரி முதல் மார்ச் வரை தமிழக கடற்கரை பகுதிக்கு வந்து முட்டையிட்டு செல்லும். ஆலிவ் ரெட்லி ஆமைகள் சுமார் 150 முதல் 180 முட்டைகள் வரை இடும். ஆமைகள் முட்டையிடும் போது நாய், நரி மற்றும் சமூக விரோதிகளால் முட்டைகள் சேதப்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. எனவே கடற்கரை மணல் பரப்பில் ஆமைகள் இடும் முட்டைகளை சேகரித்து வனத்துறைக்கு சொந்தமான ஆமை குஞ்சுகள் பொறிப்பகத்தில் பாதுகாப்பாக வைத்து பராமரிக்கப்படுகின்றன.

45 முதல் 55 நாட்கள் வைத்து பாதுகாத்து குஞ்சு பொரித்தவுடன் கடலில் விடப்படுவது வழக்கம். அதன்படி நெல்லை மாவட்ட கடற்கரை கிராமங்களில் வனத்துறையினரும், கடற்கரை கிராம பொதுமக்களும் இணைந்து அரிய வகை கடல் ஆமைகளை பாதுகாத்து வருகின்றனர். இந்தாண்டு 2,552 அரியவகை ஆமை முட்டைகளை கூடங்குளம் அருகே உள்ள அஞ்சல் மற்றும் கூட்டப்பனை கடற்கரை கிராமங்களில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் பராமரித்து பாதுகாத்து வந்தனர். இந்த கடல் ஆமை முட்டைகள் 45 நாட்கள் முதல் 50 நாட்களுக்குள் குஞ்சுகள் பொறித்து வெளியே வருகின்றன.

அவ்வாறு 736 கடல் ஆமை குஞ்சுகள் ஏற்கனவே கடலில் விடப்பட்டு விட்டன. நேற்று கூடங்குளம் அருகேயுள்ள பஞ்சல், கூட்டப்பனை கடற்கரை கிராமங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட கடல் ஆமை முட்டைகளில் இருந்து 606 குஞ்சுகள் கடலில் பாதுகாப்பாக விடப்பட்டன. நிகழ்ச்சியில் நெல்லை மாவட்ட வன அலுவலர் இளங்கோ, ராதாபுரம் வன சரக அலுவலர் செங்குட்டுவன், வனவர் அப்பனசாமி மற்றும் கடலோர பாதுகாப்பு குழும அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வாகனங்களை வழிமறிக்கும் விரிகொம்பன் காட்டுயானை: விழி பிதுங்கும் மூணாறு பகுதி மக்கள்



மூணாறு, ஏப்.18

மூணாறு அருகே வாகனங்களை வழி மறிக்கும் காட்டுயானையால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். கேரள மாநிலம், மூணாறு அருகே சின்னார் வன உயிரின சரணாலயத்திற்கு உட்பட்ட வனப்பகுதிகளில் விரிகொம்பன் காட்டு யானை நடமாடி வருகிறது. இந்த யானை சாலையில் நின்று கொண்டு வாகனங்களை வழி மறிப்பது, பின் தொடர்ந்து விரட்டுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருவது தொடர்கதையாகி வருகிறது. இதனால் மூணாறுக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இந்த யானை அப்பகுதியில் வசிக்கும் விமலன் என்பவரை கடந்த பிப். 7ம் தேதி தாக்கி கொன்றுள்ளது. நேற்று முன்தினம் மாலை 5 மணி அளவில் உடுமலையிலிருந்து மூணாறுக்கு பயணிகளுடன் சென்ற தனியார் பேருந்தை விரிகொம்பன் வழிமறித்தது. மேலும், பைக், கார் போன்ற வாகனங்களை ஆக்ரோஷமாக விரட்டியது. இதனால் அப்பகுதியில் அரை மணி நேரம் போக்குவரத்து தடைபட்டது. காட்டுயானை வனப்பகுதிக்குள் சென்றவுடன் தப்பித்தோம், பிழைத்தோம் என வாகன ஓட்டிகள் வாகனத்தை எடுத்துக் கொண்டு விரைந்து சென்றனர்.

# தந்தையை கம்பியால் அடித்து கொன்று தூக்கில் தொங்க விட்ட மகள் கைது

ராஜபாளையம், ஏப்.18

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் அருகே எம்பிகே புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சுப்பிரமணி(60). பால் வியாபாரி. மனைவி ஈஸ்வரி(55), மகள் தேவயானி(27). தேவயானிக்கு திருமணமாகி இரு குழந்தைகள் உள்ளனர். கணவரை பிரிந்து பெற்றோருடன் வசித்து வருகிறார். இவரை பலமுறை கணவர் வந்து அழைத்தும் செல்லாததால் சுப்பிரமணி, மகளை கண்டித்துள்ளார். இதற்கு மனைவி ஈஸ்வரி, மகள் தேவயானி எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இது தொடர்பாக சுப்பிரமணிக்கும் அவரது மனைவி, மகளுக்கும் வீட்டில் தகராறு ஏற்பட்டது.



தகராறு முடிந்த சிறிது நேரத்தில் சுப்பிரமணி, வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்து கிடந்தார். போலீசார் விசாரித்ததில், மகள் தேவயானி, தனது தாய் மற்றும் மாமவுடன் சேர்ந்து சுப்பிரமணியை கம்பியால் அடித்து கொன்று, தூக்கில் தொங்கவிட்டது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் மூவரையும் கைது செய்தனர்.

# காணாமல் போன பணம் குறித்து விசாரித்ததால் விரக்தி; மருத்துவமனை 4வது மாடியில் இருந்து கீழே குதித்து மாணவி தற்கொலை: கோவையில் சோகம்



கோவை, ஏப்.18

: கோவையில் காணாமல் போன பணம் குறித்து விசாரித்ததால் மருத்துவமனையின் 4வது மாடியில் இருந்து குதித்து மாணவி தற்கொலை செய்து கொண்டார். திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்தவர் அனுப்பிரியா (19). இவர், கோவையில் உள்ள தனியார் ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் விடுதியில் தங்கி முதலாம் ஆண்டு படித்து வந்தார். இவர் நேற்று முன்தினம் இரவு மருத்துவமனையின் 4வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். தகவலறிந்து வந்த பீளமேடு போலீசார் மாணவியின் உடலை மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். அதில், மருத்துவமனையில் வேறொரு மாணவியின் ரூ.1500 காணாமல் போய் விட்டதாக கூறப்படுகிறது. இது குறித்து அனுப்பிரியாவையும், சக மாணவர்களை அழைத்து விசாரித்துள்ளனர்.

இதனால் மனவேதனை அடைந்த அனுப்பிரியா மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. இதுகுறித்து மாணவியின் தாய் மற்றும் சக மாணவர்கள் கூறும்போது, ''பீளமேடு போலீசார் இது குறித்து விசாரணை நடத்த வேண்டும். விசாரணை என்ற பெயரில் அனுப்பிரியாவிடமும், அவருடன் இருந்த மற்றொரு மாணவரிடமும் பேசி உள்ளனர். இந்த மன அழுத்தம் காரணமாகவே மாணவி அனுப்பிரியா மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். போலீசார் உரிய முறையில் விசாரணை நடத்தி அனுப்பிரியாவின் மரணத்திற்கு காரணமான நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றனர். கல்லூரி நிர்வாகத்தினர் கூறுகையில், ''மாணவியிடம் சாதாரண விசாரணையே நடத்தப்பட்டது. விசாரணைக்கும், மாணவி தற்கொலைக்கும் காரணமில்லை'' என்றனர்.

# காவல் நிலையம் முன் பெண் தற்கொலை: 2 எஸ்.ஐ, ஏட்டு இடமாற்றம்

தஞ்சாவூர், ஏப்.18

தஞ்சாவூர் மாவட்டம் நடுக்காவேரியை சேர்ந்தவர் அய்யாவு. இவரது மகன் தினேஷ் (32), மகள்கள் மேனகா(31), கீர்த்திகா(29). கடந்த 8ம் தேதி நடுக்காவேரி பேருந்து நிறுத்தத்தில் தனது தங்கைகளுடன் நின்று கொண்டிருந்த தினேஷை, நடுக்காவிரி போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று பொது இடத்தில் கத்தியை காட்டி மிரட்டியதாக போலீசார் வழக்குப்பதிந்து தினேஷை கைது செய்தனர். இதை கண்டித்து சகோதரிகள் மேனகா, கீர்த்திகா ஆகியோர் நடுக்காவேரி காவல் நிலையம் முன்பு விஷம்



குடித்தனர். இதில் கீர்த்திகா உயிரிழந்தார். மேனகா தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக இன்ஸ்பெக்டர் சர்மிளா காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டார். இன்ஸ்பெக்டர் சர்மிளாவை கைது செய்யக்கோரி கீர்த்திகாவின் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் நேற்று 8வது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில், நடுக்காவேரி காவல் நிலைய ஏட்டு மணி, உதவி ஆய்வாளர்கள் அறிவழகன், கலியபெருமாள் ஆகியோர் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# சீர்காழி - புவனகிரி அருகே வேன் கவிழ்ந்து விபத்து 10க்கும் மேற்பட்டோர் காயம்

நாகை , ஏப்.18

சீர்காழி – புவனகிரி அருகே வேன் கவிழ்ந்து விபத்து 10க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். விபத்தில் கம்மாபுரத்தில் இருந்து வேளாங்கண்ணிக்கு ஆன்மீகப்பயணம் சென்ற 10 பேர் காயம் அடைந்தனர். 20 பேருடன் வேளாங்கண்ணிக்குச் சென்ற வேனின் டயர் வெடித்து,

கவிழ்ந்ததாக விசாரணையில் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

# ஆவடி படைத்துறை சீருடை ஆலைக்கு மிரட்டல்




சென்னை, ஏப்.18

சென்னை ஆவடியில் படைத்துறை சீருடை தொழிற்சாலைக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் மின்னஞ்சலுக்கு மர்மநபர்கள் வெடிகுண்டு மிரட்டல் செய்தியை அனுப்பியுள்ளனர். தகவல் அறிந்த ஆவடி டேங்க் பேக்டரி போலீசார், மோப்பநாய், வெடிகுண்டு நிபுணர்களை வரவழைத்து சோதனை நடத்தி வருகின்றனர்.

# நெல்லை தேசிய நெடுஞ்சாலையில் 55500 சதுர அடியில் பொருநை அருங்காட்சியகம்

நெல்லை, ஏப்.18

நெல்லை தேசிய நெடுஞ்சாலையில் 55500 சதுர அடியில் ரூ.33.02 கோடி செலவில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட தொல்லியல் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் ரூ.22.10 கோடி செலவில் அமைக்கப்படும் என்றும் ரூ.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நொய்யல் அருங்காட்சியக கட்டடம் மற்றும் முகப்பு வடிவமைப்பு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இம்மாத இறுதியில் நிறைவடையும் தொல்காப்பியப் பூங்கா மேம்பாட்டுப் பணிகள்




சென்னை , ஏப்.18

சென்னை தொல்காப்பியப் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் இம்மாத இறுதியில் நிறைவடையும் என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார். மேலும், சென்னையில் இந்த நிதியாண்டில் 30 பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளதாகவும், 273 பூங்காக்கள் மேம்படுத்தப்பட உள்ளதாகவும் சட்டப்பேரவையில் பதிலளித்தார்.

# கோடை சீசனை முன்னிட்டு மூணாறில் மே 1 முதல் மலர் கண்காட்சி துவக்கம்

மூணாறு, ஏப்.18

கோடை சுற்றுலா சீசனை முன்னிட்டு, மூணாறில் மலர் கண்காட்சி மே 1 முதல் மே 10 வரை நடைபெறவுள்ளது. தென்னகத்து காஷ்மீர் என வர்ணிக்கப்படும் கேரள மாநிலம், மூணாறில் ஆண்டுதோறும் கோடை சுற்றுலா சீசனில் வருகை தரும் சுற்றுலாப்பயணிகளை மகிழ்விக்கும் வகையில் மாவட்ட சுற்றுலாதுறை சார்பில் மலர் கண்காட்சி மே 1 முதல் மே 10 வரை நடைபெறும். மூணாறு அருகே கொச்சி தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் மாவட்ட சுற்றுலா துறைக்குச் சொந்தமான தாவரவியல் பூங்காவில் 15 ஏக்கர் பரப்பளவில் உள், வெளிநாடுகளில் காணப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட அரிய வகை பூக்கள் உள்பட 1,500 வகை வண்ணப்பூக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் யானை, டைனோசர், காட்டெருமை உட்பட்ட விலங்குகளின் உருவம் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பூங்காவில் இதய வடிவில் செல்பி பாயின்ட், சிறுவர்களுக்கு பொழுதுபோக்கு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இரவு நேரங்களில் ஒளிரும் விளக்குகள்,




இசை நீரூற்று போன்றவை அமைக்கப்பட்டுள்ளது. மலர் கண்காட்சி நடக்கும் நாட்களில் மாலை 6 மணி முதல் 9 மணி வரை பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பூங்காவில் நுழைவு கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ.100, சிறுவர்களுக்கு ரூ.50 வசூலிக்கப்படுகிறது. காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை பூங்காவை பார்வையிடலாம் என நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பூப்பெய்திய மாணவியை வகுப்பறைக்கு வெளியே தனியாக அமர வைத்து தேர்வு எழுத வைத்த விவகாரம்: பள்ளி முதல்வர் ஜாமினை பரிசீலிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஏப்.18

கோவையில் பூப்பெய்திய தனியார் பள்ளி மாணவியை வகுப்பறைக்கு வெளியே தனியாக அமர வைத்து தேர்வு எழுத வைத்த சம்பவத்தில் பள்ளி முதல்வர் உள்ளிட்டோர் சரணடையும் நாளில் ஜாமின் மனுக்களை பரிசீலிக்க கோவை முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மாணவியின் தந்தை அளித்த புகாரின் பேரில் பள்ளி தாளாளர் தங்கவேல் பாண்டியன், முதல்வர் ஆனந்தி, அலுவலக உதவியாளர் சாந்தி ஆகியோர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் சரணடைந்த நாளில் ஜாமின் மனுவை பரிசீலிக்கும்படி உத்தரவிடக் கோரி தங்கவேல் பாண்டியன், ஆனந்தி, சாந்தி ஆகியோர் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

# அந்தியூரில் காற்றுடன் கனமழை 100 ஏக்கர் நெற்பயிர்கள் சாய்ந்து சேதம்: விவசாயிகள் கவலை



அந்தியூர், ஏப்.18

அந்தியூர் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று அதிகாலை காற்றுடன் பெய்த கனமழைக்கு 100 ஏக்கர் நெற்பயிர்கள் சேதமாகின. ஈரோடு மாவட்டம் அந்தியூர் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று அதிகாலை சூறைக்காற்றுடன் கன மழை பெய்தது. இதில், குறிப்பாக அந்தியூர், அத்தாணி, சவுண்டப்பூர், வரப்பள்ளம், மேவாணி, பெருந்தலையூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகாலை 5 மணி முதல் 7 மணி வரை காற்றுடன் மழை பெய்தது.

இந்த மழையினால் அத்தாணி அருகே உள்ள தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசன பகுதி மற்றும் கூகலூர் கிளை வாய்க்கால் பகுதிகளில் இன்னும் ஒரு வாரத்தில் அறுவடைக்கு தயாராக இருந்த இரண்டாம் போக நெற்பயிர்கள் வயலில் சாய்ந்து விட்டன. தற்போது, வயல் வெளிகளில் நெற்பயிர்கள் நன்கு விளைந்து அறுவடைக்கு தயாராக இருந்த ஏடிடி 38, 55 நெல் ரகங்கள் வயல்வெளிகளில் மழையினால் சாய்ந்துவிட்டன. தடப்புள்ளி, அரக்கன் கோட்டை பாசன பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள்நேற்று பெய்த கனமழையினால் சேதமாகின. இதனால், விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

# விடுதலைப்போரின் வீரமிகு அடையாளம் தீரன் சின்னமலையின் பிறந்த நாள்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்



சென்னை, ஏப்.18

எதிரிகளால் இறுதிவரை நேரடியாக போரிட்டு வீழ்த்திட முடியாத தீரன் சின்னமலையின் வீரமும் – தியாகமும் என்றைக்கும் நிலைத்திருக்கும் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார். சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்தநாளை ஒட்டி, சென்னைகிண்டியில் உள்ள அவரது சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்தநாளை தமிழ்நாடு அரசு அரசு விழாவாக கொண்டாடி வருகிறது. அதன்படி, இன்று தீரன் சின்னமலையின் 269 பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. தீரன் சின்னமலை பிறந்தநாளை ஒட்டி கோவை, ஈரோடு, திருப்பூர் போன்ற கொங்கு மாவட்டங்களில் அவரது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்தநாளை ஒட்டி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்ததாவது; விடுதலைப்போரின் வீரமிகு அடையாளம் தீரன் சின்னமலையின்பிறந்தநாள்இன்று. சென்னிமலைக்கும்–சிவன் மலைக்கும் நடுவே ஒரு சின்னமலை என்று ஆங்கில ஆதிக்கத்தை குலை நடுங்கச் செய்தவர். எதிரிகளால் இறுதிவரை நேரடியாக போரிட்டு வீழ்த்திட முடியாத தீரன் சின்னமலையின் வீரமும் – தியாகமும் என்றைக்கும் நிலைத்திருக்கும். ஆதிக்கத்தையும் – அடிமைத்தனத்தையும் ஒழிப்பதற்கான உத்வேகத்தை தீரன் சின்னமலையின் வரலாற்றின் வழியே பெறுவோம். வாழ்க அவர் புகழ்! என்று பதிவிட்டுள்ளார்.

# விசைத்தறியாளர்கள் கோரிக்கையை நிறைவேற்றுக: எடப்பாடி வலியுறுத்தல்

சென்னை, ஏப்.18

பேச்சுவார்த்தை நடத்தி விசைத்தறியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சட்டப்பேரவையில் வலியுறுத்தி உள்ளார்.

வேலை நிறுத்தம் காரணமாக லட்சக்கணக்கான விசைத்தறி தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிப்பு என பேரவையில் பேசினார். 2 ஆயிரம் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கூலி குறைத்து வழங்கப்படுவதாக கூறினார். கூலி உயர்வு குறித்து ஜவுளி உற்பத்தியாளர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று பழனிசாமி வலியுறுத்தினார்.

# குன்னூர் அருகே காலில் கம்பி குத்திய நிலையில் காயத்துடன் சுற்றித்திரியும் காட்டு மாட்டுக்கு சிகிச்சை: வனத்துறையினர் நடவடிக்கை



குன்னூர், ஏப்.18

குன்னூர் அருகே காலில் கம்பி குத்திய நிலையில் காயத்துடன் சுற்றித்திரியும் காட்டு மாட்டுக்கு முதற்கட்டமாக சிகிச்சையை குன்னூர் வனத்துறையினர் துவக்கி, வனப்பகுதியில் விடுவித்தனர். நீலகிரி மாவட்டம் அடர்ந்த வனங்கள் சூழ்ந்துள்ளதால், இந்த வனப்பகுதியில் யானை, சிறுத்தை, கரடி காட்டுமாடு உள்ளிட்ட வனவிலங்குகள் வாழ்ந்து வருகின்றன. இவை குடிநீர் மற்றும் உணவு தேடி குடியிருப்பை நோக்கி படையெடுத்து வருகின்றன. குடியிருப்பில் உலாவரும் காட்டு மாடுகள் சிலசமயங்களில்பள்ளத்தில் விழுந்து காயம் ஏற்படுகிறது.

மேலும் தடுப்பு வேலிகளில் அடிக்கடி சிக்கிக்கொள்கிறது. குன்னூர் பகுதியில் காட்டு மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பல்வேறு பகுதிகளில் காட்டு மாடுகள் கூட்டம் கூட்டமாக சுற்றித் திரிகிறது. குன்னூர் அருகே சின்ன கரும்பாலம் பகுதியில் 350க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளது. இந்த பகுதியில் காட்டு மாடு ஒன்று, வலது பின்னங்காலில் கம்பி குத்திய நிலையில் காயத்துடன்கடந்த ஒரு வார காலமாக சுற்றி வருவதாக அப்பகுதி மக்கள் வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர். அதன் அடிப்படையில் குன்னூர் வனச்சரகர் ரவிந்திரநாத் உத்தரவின் பேரில் வனத்துறையினர் காட்டு மாடை கண்காணித்து வந்தனர்.

காட்டு மாடு இருக்கும் இடத்தை அறிந்த வனத்துறையினர் நேற்று முதுமலை கால்நடை மருத்துவர் ராஜேசை வரவழைத்து காட்டு மாட்டுக்கு மயக்க ஊசி செலுத்தி, சிகிச்சை அளித்தனர். காயத்தை சரி செய்யும் வகையில் முதற்கட்டமாக காலில் சிக்கி கொண்டிருந்த கம்பியை அகற்றி, மருந்து வைத்து கட்டினர். பின் காட்டு மாட்டுக்கு உணவின் மூலம் மருந்துகள் வழங்கப்பட்டு வனப்பகுதியில் விடுவிக்கப்பட்டது. தொடர்ந்து, காட்டு மாட்டை வனத்துறையினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.இதையடுத்து வனத்துறையினரின் இந்த மனித நேயமிக்க துரித நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் பாராட்டு பெற்றுள்ளது.

# சபரிமலை பக்தர்கள் சென்ற KSRTC பேருந்து மீது மரம் விழுந்து விபத்து



கேரளா, ஏப்.18

பம்பையில் இருந்து நிலக்கல்லுக்கு சபரிமலை பக்தர்கள் சென்ற KSRTC பேருந்து மீது மரம் விழுந்தது. பேருந்தின் மேற்கூரை சேதமடைந்தது. நல்வாய்ப்பாக பேருந்தில் பயணித்த ஐயப்ப பக்தர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவலறிந்து பம்பையில் இருந்து வந்த தீயணைப்புத் துறையினர் பேருந்து மீது விழுந்த மரத்தை அப்புறப்படுத்தி மாற்றுப் பேருந்து மூலம் பக்தர்களை அனுப்பி வைத்தனர்.

பங்குனி ஆறாட்டு திருவிழா மற்றும் சித்திரை விஷு சிறப்பு பூஜைகளுக்காக சபரிமலை அய்யப்பன் கோவில் நடை கடந்த 1ம் தேதி திறக்கப்பட்டது. மறுநாள் 2ம் தேதி தொடங்கியதிருவிழா11ம்தேதிநடைபெற்றஆறாட்டுடன் நிறைவடைந்தது. கடந்த 14ம் தேதி விஷுக்கணி தரிசனம் நடைபெற்றது.நாளை18ம்தேதி வரைசபரிமலை கோவில் நடை திறந்திருக்கும். மண்டல, மகரவிளக்கு காலத்திற்கு அடுத்தபடியாக இந்த மாதம் நீண்ட நாட்கள் நடை திறந்திருப்பதால்தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் சபரிமலையில் குவிந்து வருகின்றனர்.

இந்த நிலையில், பம்பையில் இருந்து நிலக்கல்லுக்கு சபரிமலை பக்தர்கள் சென்ற கேரள அரசு பேருந்து KSRTC மீது மரம் ஒன்று திடீரென விழுந்தது. இதில் பேருந்தின் மேற்கூரை சேதமடைந்தது.

நல்வாய்ப்பாக பேருந்தில் பயணித்த அய்யப்ப பக்தர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவலறிந்து பம்பையில் இருந்து வந்த தீயணைப்புத் துறையினர் பேருந்தின் மீது விழுந்த மரத்தை அப்புறப்படுத்தி மாற்றுப் பேருந்து மூலம் பக்தர்களை அனுப்பி வைத்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# கூடலூர் சிறையில் கைதியை தாக்கிய 5 போலீசார் சஸ்பெண்ட் பரபரப்பு

நீலகிரி ஏப்.18

நீலகிரி மாவட்டம் கூடலூர் கிளை சிறையில் சில தினங்களுக்கு முன்பு வழக்கு ஒன்றில் கூடலூரை சேர்ந்த நிஜாமுதீன் என்ற கைதி அடைக்கப்பட்டிருந்தார். அப்போது சிறை போலீசாருக்கும், கைதி நிஜாமுதீனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரம் அடைந்த போலீசார், கைதி நிஜாமுதீனை இரும்பு கம்பி மற்றும் லத்தியால் தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் நிஜாமுதீன் கைகள் உடைந்தது. பலத்த காயத்துடன் சிறையில் தவித்து வந்த நிலையில் நிஜாமுதீன் உறவினர்கள் கலெக்டரிடம் புகார் அளித்தனர். கூடலூர் மாஜிஸ்திரேட்டு, தாசில்தார் முத்துமாரி, உதவி காவல் கண்காணிப்பாளர் வசந்தகுமார் குழுவினர் கூடலூர் சிறையில் நேற்று ஆய்வு செய்தனர். அப்போது கைதி நிஜாமுதீனை கடுமையாக தாக்கியது உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அந்த குழு அளித்த அறிக்கையின்படி கூடலூர் கிளை சிறைச்சாலை போலீசார் 5 பேர் துறை ரீதியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நீலகிரியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அதிமுக மூத்த தலைவர்களுடன் கூட்டணி தொடர்பாக அமித்ஷா கூறிவிட்டார்: தமாகா தலைவர் ஜி.கே.வாசன் விளக்கம்

சென்னை, ஏப்.18

ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அதிமுக மூத்த தலைவர்களுடன் பேசி கூட்டணி தொடர்பாக தெளிவாக கூறிவிட்டார் என தமாகா தலைவர் ஜி.கே.வாசன் விளக்கம் அளித்துள்ளார்.

வெற்றி கூட்டணியாக NDA உள்ளதால் சிலர் குழப்பத்தை ஏற்படுத்த நினைக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

# ஹோட்டலில் இருந்து தப்பியோடிய குட் பேட் அக்லி வில்லன் நடிகர்



பிரபல மலையாள நடிகர் ஷைன் டாம் சாக்கோ. இவர் தமிழில் விஜய்யுடன் 'பீஸ்ட்' படத்தில் தீவிரவாதியாக நடித்தார். கார்த்திக் சுப்புராஜ் இயக்கிய 'ஜிகர்தண்டாடபுள்எக்ஸ்' படத்தில் நடிகராகவும் அரசியல்வாதியாகவும் நடித்திருந்தார். தெலுங்கில் வெளியான தசரா படத்தில் வில்லனாக நடித்து பிரபலமானவர். அவ்வப்போது பரபரப்பான செய்திகளில் அடிபடும் சாக்கோ சில வருடங்களுக்கு முன்பு படப்பிடிப்பில் போதைப் பொருள் பயன்படுத்தினார் என்று கைது செய்யப்பட்டு பின் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். 'குட் பேட் அக்லி' திரைப்படத்தில் வில்லன் கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார்.

சமீபத்தில் இவர் மீது மலையாள நடிகை ஒருவர் பரபரப்பு குற்றச்சாட்டு முன்வைத்து இருந்தார்.சூத்ரவாக்கியம் படத்தின் படப்பிடிப்பின்போது, ஷைன் டாம் ஷாக்கோ போதையில் தன்னிடம் தகாத முறையில் நடந்துகொண்டதாக மலையாள நடிகை வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்தார். இது தொடர்பாக பிலிம் சேம்பர் மற்றும் உள் புகார்கள் குழுவிடம் புகாரும் அளித்து இருந்தார். இந்த பரபரப்பு அடங்குவதற்குள் மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார் ஷைன் டாம் சாக்கோ.

கொச்சியில் உள்ள பிரபல ஹோட்டலில் தங்கியிருந்த ஷைன் டோம் ஷாக்கோ, தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து தப்பி ஓடும் காட்சிகள் வெளியாகியுள்ளன. ஹோட்டலுக்கு போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகள் ரெய்டுக்கு வந்த நிலையில், அவர்களிடம் இருந்து தப்பும் வகையில், இரவு 11 மணியளவில் இருந்து தப்பி ஓடியுள்ளார். அதிகாரிகள் வருவதை முன்கூட்டியே அறிந்து அவர் தப்பியிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஹோட்டலின் ஜன்னல் வழியே வெளியேறி அவர் தப்பி ஓடும் காட்சிகளும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. ஷாக்கோ தங்கியிருந்த ஹோட்டல் அறையில் போதைப்பொருள் எதுவும் சிக்கவில்லை. ஷாக்கோவுடன் தங்கியிருந்த பெண் ஒருவரை பிடித்து அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்.

இது தொடர்பாக போலீசார் கூறுகையில், "கொச்சியில் உள்ள ஹோட்டலுக்கு நேற்று காலை 5.30 மணிக்கு ஷாக்கோ வந்து இருக்கிறார். பின்னர் சற்று நேரத்தில் அவருடைய பெண் தோழி தனியாக வந்து வேறொரு அறையை புக் செய்து இருக்கிறார். அன்று மாலை இருவரது நண்பர்களும் ஹோட்டலுக்கு வந்துள்ளனர். அன்று மாலை கிடைத்த ரகசிய தகவலின் படி சிறப்பு குழு ஹோட்டலுக்கு ரெய்டு சென்றது. ஆனால் அங்கிருந்து ஷாக்கோ தப்பிவிட்டார்" என்றனர்.

கடந்த 2015ம் ஆண்டு ஜனவரி 30ம் தேதி கொச்சி காவல்துறையினர் கடவந்த்ரா பகுதியில் உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் நடத்திய சோதனையின்போது, கொகைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அங்கிருந்த ஷைன் டாம் சாக்கோவையும் அவருடன் சேர்த்து மாடலிங் செய்து வந்த நான்கு பெண்களையும் போலீசார் கைது செய்தனர். குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் அவர்கள் மீதான வழக்கை தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

# 7ஜி ரெயின்போ காலனி 2 பாடல் குறித்து செல்வராகவன் வெளியிட்ட அப்டேட்




இளைஞர்கள் கொண்டாடும் படங்களை இயக்குபவர் செல்வராகவன். 2004ம் ஆண்டில் ரவி கிருஷ்ணாசோனியா அகர்வால் நடிப்பில் இவர் இயக்கிய '7ஜி ரெயின்போகாலனி' படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இப்படத்தில் இடம் பெற்ற 'கண்பேசும் வார்த்தைகள்', 'கனா காணும் காலங்கள்' உள்ளிட்ட பாடல்கள் ரசிகர்களை கவர்ந்தன. 19 ஆண்டுகளுக்கு பிறகு '7ஜி ரெயின்போ காலனி' 2ம் பாகத்துக்கான பட வேலைகள் நடைபெற்று வருகிறது.. முதல் பாகத்தை இயக்கிய செல்வராகவனே 2ம் பாகத்தையும் இயக்குகிறார். முதல்பாகத்தில்நடித்தரவிகிருஷ்ணா2ம்பாகத்திலும் நாயகனாக நடித்து வருகிறார்.

புத்தாண்டை முன்னிட்டு இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது. 7ஜி ரெயின்போ காலனி படத்தின் 2ம் பாகம் வெளியாக உள்ளதால் ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். அனஸ்வரா ராஜன் கதாநாயகியாக நடிக்கிறார். இப்படத்தினை ஸ்ரீ சூர்யா மூவிஸ் நிறுவனம் தயாரிக்கிறது. யுவன் சங்கர் ராஜா இதற்கு இசையமைக்கிறார். ராம்ஜி இதன் ஒளிப்பதிவு பணிகளை மேற்கொள்கிறார்.இந்தபடத்தின்படப்பிடிப்புகள்ஏற்கனவேசத்தமேஇல்லாமல்தொடங்கிவிறுவிறுப்பாகநடைபெற்று வருகிறது. இதற்கிடையில் இந்த படத்தின்பர்ஸ்ட் லுக் போஸ்டர் கடந்த ஜனவரி மாதம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

'7ஜி ரெயின்போ காலனி 2' படத்தின் படப்பிடிப்பு 50 சதவீதம் முடிவடைந்துவிட்டதாக செல்வராகவன் சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இப்படத்தின் 2ம் பாகத்தில் யுவன் இசையில் பாடகி ஸ்ரீநிதி ஸ்ரீபிரகாஷ் ஒரு பாடல் பாடியுள்ளதாக இயக்குநர் செல்வராகவன் தனது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

# டெல்லி அணியின் பயிற்சியாளருக்கு அபராதம் விதித்த ஐ.பி.எல். நிர்வாகம்.. காரணம் என்ன..?



18வதுஐ.பி.எல்.கிரிக்கெட்தொடர்இந்தியாவின்பல்வேறுநகரங்களில் நடந்து வருகிறது. இதில் டெல்லியில் உள்ள அருண் ஜெட்லி ஸ்டேடியத்தில் நேற்றிரவு அரங்கேறிய 32வது லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற ராஜஸ்தான் கேப்டன் சஞ்சு சாம்சன் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த டெல்லி அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்கு 188 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக அபிஷேக் போரல் 49 ரன்கள் அடித்தார். ராஜஸ்தான் தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

அடுத்து 189 ரன் இலக்கை நோக்கி ஆடிய ராஜஸ்தான் அணியும் 4 விக்கெட்டுக்கு 188 ரன்கள் அடித்ததால் ஆட்டம் சமனில் முடிந்தது. இதையடுத்து வெற்றி தோல்வியை நிர்ணயிக்க ஆட்டம் சூப்பர் ஓவருக்கு சென்றது.

சூப்பர் ஓவரில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான் 5 பந்தில் இரு விக்கெட்டுகளையும் இழந்து 11 ரன் எடுத்தது. பின்னர் 12 ரன் இலக்கை நோக்கி ஆடிய டெல்லி அணி 4 பந்தில் 13 ரன் சேர்த்து வெற்றி பெற்றது.

பரபரப்பாகநடைபெற்றஇந்தபோட்டியின்போதுநடுவருடன்வாக்குவாதத்தில்ஈடுபட்ட டெல்லிஅணியின்பந்துவீச்சு பயிற்சியாளரான முனாப் படேலுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 25 சதவீதம் அபராதமும், ஒரு தகுதி இழப்பு புள்ளியும் விதித்து ஐ.பி.எல். நிர்வாகம் தண்டனை வழங்கியுள்ளது.

அவர் எந்த காரணத்திற்காக நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்பது குறித்து தகவல் வெளிவரவில்லை. இருப்பினும் களத்தில் உள்ள வீரர்களுக்கு தன்னுடைய ஆலோசனைகளை தெரிவிக்கும் வகையில் மற்றொரு வீரரை அனுப்ப நடுவர் மறுத்ததால் முனாப் படேல் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார் என கூறப்படுகிறது.

# ஐ.பி.எல்.2025: மும்பை அணிக்கு 163 ரன்கள் வெற்றி இலக்கு



ஐ.பி.எல். தொடரின் 18வது சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறும்33வதுலீக்ஆட்டத்தில்முன்னாள் சாம்பியன்களான மும்பை இந்தியன்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதி வருகின்றன.

அதில் டாஸ் வென்ற மும்பை அணியின் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா பந்துவீச்சைத் தேர்வு செய்தார். இதன்படி சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் சார்பில் முதலாவதாக அபிஷேக் சர்மா மற்றும் டிராவிஸ் ஹெட் ஆகியோர் களமிறங்கினர்.

முதல் ஓவரின் முதல் பந்திலே அபிஷேக் சர்மா கொடுத்த கேட்சை பிடிக்க மும்பை அணியினர் தவறினர். அடுத்து கொடுத்த மற்றொரு கேட்சையும் மும்பை வீரர்கள் தவறவிட்டநிலையில் அதை பயன்படுத்தி அவர் அதிரடியாக ஆடத்தொடங்கினார். இந்நிலையில் சிறப்பாக ஆடி வந்த அபிஷேக் சர்மா 40 (28) ரன்களில் கேட்ச் ஆனார். அடுத்து களமிறங்கிய இஷான் கிஷன் 2 ரன்னில் வெளியேற, அவரைத்தொடர்ந்து ஓரளவு தாக்குப் பிடித்த டிராவிஸ் ஹெட் 28 (29) ரன்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக நிதிஷ் குமார் ரெட்டியுடன், ஹென்ரி கிளாசன் ஜோடி சேர்ந்தார். ஓரளவு ரன்கள் சேர்த்த இந்த ஜோடியில் நிதிஷ் குமார் ரெட்டி 19 ரன்களில் கேட்ச் ஆனார். அடுத்து அதிரடி காட்டி வந்த ஹென்ரி கிளாசன் 37 (28) ரன்களில் ஆட்டமிழந்தார்.

முடிவில் அதிரடி காட்டிய அன்கிட் வர்மா 18 (8) ரன்களும், பேட் கம்மின்ஸ் 8 (4) ரன்களும் எடுத்து கடைசிவரைஆட்டமிழக்காமல்களத்தில்இருந்தனர்.

இறுதியில் ஐதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 162 ரன்கள் எடுத்தது. மும்பை அணியின் சார்பில் அதிகபட்சமாக வில் ஜாக்ஸ் 2 விக்கெட்டுகளும், ஹர்திக் பாண்ட்யா, பும்ரா மற்றும் போல்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 163 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்க உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.